தினமணி

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி உயர்வு**

First Published : 24 Sep 2011 08:56:41 AM IST

நாமக்கல், செப். 23: நாமக்கல் மண்டலத்தில் ஆகஸ்ட் மாதம் முட்டை ஏற்றுமதி அதிகரித்துள்ளது. வளைகுடா நாடுகளிலும், ஆப்கானிஸ்தானிலும் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் கடுமையான குளிர் நிலவும். இதன் காரணமாக, இந்த நாடுகளில் முட்டை நுகர்வு கணிசமாக அதிகரித்துள்ளது. தேவை உயர்ந்ததால், இந்தியாவில் இருந்து கூடுதல் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டன. நாமக்கல் மண்டலத்தில் ஜூலை மாதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை 2.73 கோடி. அதுவே ஆகஸ்ட் மாதத்தில் 4.91 கோடியாக அதிகரித்தது. டிசம்பர் வரை வளைகுடா நாடுகளில் குளிர்காலம் நிலவும் என எதிர்பார்க்கப்படுவதால், முட்டை ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதாக கோழிப் பண்ணை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் காய்கறி விதைகள்**

First Published : 23 Sep 2011 10:12:59 AM IST

கோத்தகிரி, செப். 22: தேசிய தோட்டக் கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கோத்தகிரி வட்டார விவசாயிகளுக்கு 50 சதவீதத்தில் காய்கறி விதைகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கோத்தகிரி தோட்டக் கலைத் துறை உதவி இயக்குனர் கே.ராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் வெளியிட்ட விபரம்:

விவசாயிகள் உயர் தொழில்நுட்ப பசுமை கூடாரங்கள் அமைப்பதற்கும் அதில் பயிரிட தேவையான மலர் நாற்றுகள் வாங்குவதற்கும் அரசு 50 சதவீத மானியம் வழங்கி வருகிறது.

அதேபோல் ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் காய்கறி விதைகளை வழங்கிட அரசு அனுமதி கொடுத்துள்ளது. இதில் தோட்டக்கலை துறையின் கீழ் இயங்கும் விவசாயக் கிடங்குகளில் விதைகள் பெறப்பட்டு, பின்னர் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

மேலும் கோத்தகிரிக்குட்பட்ட நெடுகுளா பகுதியில் உருளை கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

சில சமயங்களில் இயற்கை பாதிப்பினால் விளைச்சலில் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளதால் வங்கியில் விவசாய கடன் பெற்றுள்ள உருளை கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த திட்டத்தில் பயனடையலாம்.

**அரசு தேயிலை ஏல மையம்: 80 %**

First Published : 23 Sep 2011 10:08:48 AM IST

குன்னூர்,செப். 22: குன்னூர் இண்ட்கோ சர்வ் ஏல மையத்தில் புதன்கிழமை நடைபெற்ற தேயிலை ஏலத்தில் 80 சதவீத தேயிலை தூள்கள் விற்பனையாகின.

இந்த ஏல மையத்திற்கு மொத்தம் 4 லட்சத்து 72 ஆயிரத்து 482 கிலோ தேயிலைகள் விற்பனைக்கு வந்தன.

இதில் 2 லட்சத்து 95 ஆயிரத்து 647 கிலோ இலை ரகங்களும், 1 லட்சத்து 76 ஆயிரத்து 835 கிலோ டஸ்ட் ரகங்களும் அடங்கும். உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு அதிகமாக இருந்ததால் கிலோவிற்கு ரூ.2 முதல 5 வரை விலை உயர்ந்து காணப்பட்டது.

---

**ஏலக்காய் வரத்து அதிகரிப்பு**

செப்டம்பர் 24,2011,04:41



கொச்சி : உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் ஏலக்காய்க்கு அதிகளவில் தேவை ஏற்பட்டுள்ளது. இதனால், இதன் விலை உயர்ந்து வந்தது. இந்நிலையில், கேரளாவில் ஏலக்காய் அதிகளவில் உற்பத்தியாகும் பகுதிகளிலிருந்து, இதன் வரத்து அதிகரித்துள்ளது. இதையடுத்து, ஏலக்காய் விலை அதிகம் உயராமல் நிலையாக உள்ளது என, வர்த்தகர்கள் தெரிவித்தனர். கடந்த 5 மாதங்களாக ஏலக்காய் வரத்து, கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும் போது, 150 சதவீதம் அதிகரித்துள்ளது.

தற்போது, சந்தைக்கு நாளொன்றுக்கு, 90-100 டன் ஏலக்காய் வரத்து உள்ளது. பொதுவாக, சாதாரண தினங்களில் சந்தைக்கு, 40-50 டன் என்ற அளவில் தான் ஏலக்காய் வரத்து இருக்கும். அதிக உற்பத்தி காரணமாக, ஏலக்காய் சாகுபடியாளர்கள் மிகுந்த அளவில் ஏலக்காயை சந்தைக்கு அனுப்பி வருவதாக தெரியவந்துள்ளது.

கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்பாக, ஒரு கிலோ ஏலக்காய் விலை 1,000 ரூபாய் என்ற அளவில் இருந்தது. இது, 550 ரூபாய் என்ற அளவில் சரிவடைந்து, தற்போது, 700 ரூபாய் என்ற அளவில் உள்ளது. நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான ஐந்து மாதகாலத்தில், 6,661 டன் ஏலக்காய் ஏலச்சந்தைக்கு வந்துள்ளது.

இது, கடந்த 2010-11ம் நிதியாண்டின் இதே காலத்தில், 2,106 டன் என்ற அளவிலும், 2009-10ம் நிதியாண்டின் இதே காலத்தில், 2,691 டன் என்ற அளவிலும் இருந்ததாக, கேரள ஏலக்காய் பதப்படுத்துவோர் மற்றும் சந்தைப் படுத்துவோர் கூட்டுறவு சங்கத்தின் பொது மேலாளர் பி.சி. புனோஸ் தெரிவித்தார்.

நடப்பு செப்டம்பர் மாதத்திலும், ஏலக்காய் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இம்மாத இறுதியில், ஏலச் சந்தைகளுக்கு 9 ஆயிரம் டன் ஏலக்காய் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2009 - 10ம் முழு நிதியாண்டில், ஏலச் சந்தைகளுக்கு 9,660 டன் ஏலக்காய் தான் வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நடப்பு நிதியாண்டில், நாட்டின் ஏலக்காய் உற்பத்தி, 13 ஆயிரம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டில், 11 ஆயிரம் டன் என்ற அளவில் இருந்தது.

**பருத்தி நூலிழை ஏற்றுமதிக்கான பதிவு 70 சதவீதம் உயர்வு**

செப்டம்பர் 24,2011,04:41



சென்ற ஆகஸ்ட் மாதம், நம் நாட்டில் இருந்து, 9.77 கோடி கிலோ பருத்தி நூலிழை ஏற்றுமதி மேற்கொள்ள, ஜவுளி ஆணையகத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இது, நலிவடைந்த ஜவுளித் துறை, புத்துயிர் பெற்று வருவதற்கான அறிகுறியாகக் கருதப்படுகிறது. எனினும், ஏற்றுமதி வரியை திரும்பப் பெறும் டீ.ஈ.எல்.பீ திட்டம் வரும் 30ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால், அதன் பிறகே ஜவுளித் துறையின் வளர்ச்சி குறித்து எதுவும் கூற முடியும் என்று இத்துறையினர் கருத்து தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு மத்தியில், நூலிழை ஏற்றுமதி வரிச் சலுகையை (டீ.ஈ.எல்.பீ திட்டம்) மத்திய அரசு திரும்பப் பெற்றது.

இத்திட்டம் பின்னர் திரும்ப அறிமுகப்படுத்தப்பட்டு வரும் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுவும், டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு உயர்ந்து வருவது போன்றவற்றாலும் ஏற்றுமதியாளர்கள் சற்றே உற்சாகத்துடன் வர்த்தகம் மேற்கொண்டனர். சென்ற ஆண்டில், மத்திய அரசு 72 கோடி கிலோ பருத்தி நூலிழை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியது. ஆனால், எட்டு மாதத்திற்குள்ளாகவே இந்த இலக்கு எட்டப்பட்டு விட்டது.

அதன் பின்னர் ஏற்றுமதி மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதால், உள்நாட்டு சந்தையில் பருத்தி நூலிழை வரத்து அதிகரித்தது. இதனால், நூலிழை விலை வீழ்ச்சியடைந்தது. நூற்பாலைகள், கையிருப்பை குறைப்பதற்காக உற்பத்தியை குறைத்தன. அதே சமயம், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், சர்வதேச சந்தையிலும் பருத்தி நூலிழைக்கான தேவை குறைந்தது. இதையடுத்து, நடப்பு நிதியாண்டு (2011-12) ஏப்ரல் முதல், நூலிழை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. எனினும், சர்வதேச பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால், இந்திய நூலிழைக்கான தேவை குறைவாகவே உள்ளது. சென்ற ஏப்ரல் மாதம் 7.13 கோடி கிலோ

பருத்தி நூலிழை ஏற்றுமதி மேற்கொள்வதற்காக ஜவுளி ஆணையகத்திடம் ஏற்றுமதியாளர்கள் பதிவு செய்திருந்தனர். இது, மே மாதம் 6.31 கோடி கிலோவாகவும், ஜூன் மாதம் 5.40 கோடி கிலோ என்ற அளவிலும் குறைந்தது. ஜூலை மாதம், 5.72 கோடி கிலோ பருத்தி நூலிழையை ஏற்றுமதி செய்வதற்காக ஏற்றுமதியாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

இது, ஆகஸ்ட் மாதம் 9.77 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு இறுதியில், ஒரு கிலோ சங்கர்-6 ரக பருத்தியின் விலை 32 ரூபாயாக சரிவடைந்தது. தற்போது ஒரு கிலோ 39 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்பனையாகிறது. பருத்தி விலை ஓரளவு நிலை பெற்றதையடுத்து, நூலிழை விலையும் சற்றே உயர்ந்துள்ளது. சென்ற ஜூன் மாதம், ஒரு கிலோ பருத்தி நூலிழை (30 கவுண்ட்), 140 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விலை போனது. இது, தற்போது 180 ரூபாய் வரை விலை போகிறது. டீ.ஈ.எல்.பீ திட்டம் முடிவடைய இன்னும் ஒரு வார காலம் மட்டுமே இருப்பதால், இந்த வளர்ச்சி தொடருமா என்ற அச்சம் ஜவுளித் துறையினருக்கு ஏற்பட்டுள்ளதாக இந்திய ஜவுளி கூட்டமைப்பின் தலைமைச் செயலர் டீ.கே.நாயர் தெரிவித்தார்.

**குப்பைக்கு போகும் செண்டுப்பூ: விலை கடும் சரிவு**

செப்டம்பர் 24,2011,09:28



நிலக்கோட்டை: விலை சரிவால் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை பகுதியில் செண்டுப்பூக்கள் (மாட்டுச் செவ்வந்தி), செடிகளில் இருந்து பறிக்கப்படாமல் உள்ளன. இப்பகுதியில் 125 எக்டேரில் இப்பூக்கள் பயிரிடப்பட்டுள்ளன. மாலை கட்டுவதற்காக, இங்கிருந்து தமிழகம் முழுவதும் அனுப்பப்படுகின்றன. புரட்டாசியில் முகூர்த்தம் இல்லாததால், விலை கிடைப்பது குதிரைக் கொம்பாக உள்ளது. இதனால் பூக்களை பறிக்க விவசாயிகள் தயங்குகின்றனர். நிலக்கோட்டை பூ சந்தையில், மல்லிகை வரத்து குறைந்து, ஒரு கிலோ, 100 முதல் 130 ரூபாய் வரை விற்றது. செவ்வந்தி, சம்பங்கி, கோழிகொண்டை, முல்லை ஆகியவை 100 ரூபாய்க்கு குறைவாக விற்றன. ஒரு வாரமாக, செண்டுப்பூ, ஐந்து ரூபாய்க்கு தான் விற்றது. சந்தைக்கு சென்று வரும் செலவு, எடுப்புக்

கூலிக்கு கூட கட்டுபடியாகாது என்பதால், விவசாயிகள், பூக்களை பறிக்காமல் விட்டனர். இதனால் பூக்கள் கருகி விட்டன. நேற்று முன்தினம், சந்தைக்கு வந்த பூக்கள், விற்காமல் குப்பையில் கொட்டப்பட்டன.

**திருந்திய நெல் சாகுபடி தீவிரம் வேளாண் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2011,02:23 IST

பள்ளிபாளையம்: "திருந்திய நெல் சாகுபடி நடவு, பள்ளிபாளையம் பகுதியில் தீவிரமடைந்துள்ளது. அதற்கு தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது' என, வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:பள்ளிபாளையம் வட்டாரத்தில், மேட்டூர் வாய்க்கால் பாசன பகுதியில், 11 வருவாய் கிராமங்களில், திருந்திய நெல் சாகுபடி முறை மூலம், 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நெல் நடவுப்பணி தீவிரமடைந்து வருகிறது. இப்பரப்பிற்கு தேவைப்படும், 45 மெ.டன் நெல் விதை வினியோகிக்கப்பட்டு, நாற்றங்கால் விடப்பட்டுள்ளது.நாற்றங்காலில், பூச்சி நோய் பாதிப்பு இல்லாமல் உயிர் உரங்கள், 10 ஆயிரத்து 800 பாக்கெட்டுகள், 1,000 கிலோ வினியோகிக்கப்பட்டது.

டி.ஏ.பி., உட்பட அனைத்து உரங்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும், 181 இடங்களில் திருந்திய நெல் சாகுபடி (எஸ்.ஆர்.ஐ.,) நாற்றங்கால்கள் விடப்பட்டு, செயல் விளக்கங்களை களப்பணியாளர்கள் செய்து காண்பித்தனர்.நெல் வயலில், பவர் வீடர் எனப்படும் நெல்களை மதிக்கும் இயந்திரத்தினை செயல் விளக்கம் செய்து காண்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒற்றை நாற்று நடவு செய்துள்ள விவசாயிகள், தொழில் நுட்ப மேல் விபரம் தேவைப்படின், பள்ளிபாளையம் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப அதிரடிக்குழவினை அனுகலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**வேளாண் அலுவலர்பொறுப்பேற்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2011,02:24 IST

மோகனூர்: கனரா வங்கி வேளாண் அலுவலர் பணியிடமாற்றம் செய்யப்பட்டதை தொடர்ந்து, பழனி வங்கி கிளையில் இருந்து நாகராஜன் என்பவர், மோகனூர் கனரா வங்கியின் வேளாண் அலுவலராக பொறுப்பேற்றுக்கொண்டார்.மோகனூர் கனரா வங்கி கிளையில், வேளாண் அலுவலராக பணியாற்றிய பாலாஜி, நாமக்கல் கிளைக்கு பணி மாற்றம் செய்யப்பட்டார். அதை தொடர்ந்து, பழனி கனரா வங்கி கிளையில் பணியாற்றிய நாகராஜன், மோகனூர் கனரா வங்கி

கிளைக்கு வேளாண் அலுவலராக மாற்றம் செய்யப்பட்டார்.அவர், மோகனூர் வங்கியில் வேளாண் அலுவலராக நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார். புதிய வேளாண் அலுவலராக பொறுப்பேற்ற நாகராஜனுக்கு, வங்கி முதுநிலை மேலாளர் ரவீந்திரன், அலுவலர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

**வன உயிரின வார விழா போட்டிகள் :பங்கேற்று சாதிக்க மாணவர்களுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2011,00:16 IST

ஊட்டி : வன உயிரின வார விழாவை முன்னிட்டு பேச்சு, வினாடி-வினா மற்றும் புகைப்பட போட்டிகள் நடத்தப்படுகிறது. நீலகிரி தெற்கு வனக்கோட்ட வன அலுவலர் அனுராக் மிஸ்ரா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: வன உயிரின வார விழா அக்டோபர் மாதம் 1ம் தேதி முதல் 7ம் தேதி வரை கொண்டாடப்படுகிறது. வன உயிரின வார விழா கொண்டாடத்தின் ஒரு பகுதியாக நீலகிரி வனத்துறை தெற்கு வனக்கோட்டம் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு அக்டோபர் 1ம் காலை 11 மணி முதல், ஊட்டி அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் பேச்சு மற்றும் வினாடி வினா போட்டிகள் நடக்கிறது.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பு மாணவர்கள் தங்கள் பெயர்களை ஊட்டியில் உள்ள நீலகிரி தெற்கு கோட்ட மாவட்ட வன அலுவலர் அலுவலகத்தில் 28ம் தேதி மாலை 3 மணிக்குள் பதிவு செய்துக்கொள்ள வேண்டும். பேச்சு போட்டி தமிழ் அல்லது ஆங்கிலம் பிரிவுகளில் நடக்கிறது. பள்ளி பிரிவில் 9-12ம் வகுப்பு மாணவர்கள் கலந்து கொள்ளலாம், அவர்களுக்கு "வனங்களும் நாகரீகமும்' என்ற தலைப்பும், கல்லூரி பிரிவு மாணவர்களுக்கு "வனங்களும், வன உயிரினங்களும் நமது வாழ்வை செம்மையாக்கும்' என்ற தலைப்பிலும் போட்டி நடக்கும்.

வினாடி வினா போட்டியில் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்கள் ஒரு பிரிவாகவும், கல்லூரி மாணவர்கள் ஒரு பிரிவாகவும் போட்டி நடக்கும். மேலும் வனங்கள் மற்றும் வன உயிரினங்கள் சம்பந்தமாக மாநில தழுவிய புகைப்பட போட்டியும் நடக்கிறது. விருப்பமுள்ளவர்கள் வனங்கள் மற்றும் வன உயிரினங்கள் சம்பந்தமான புகைப்படங்களை வரும் 28ம் தேதி மாலை 3 மணிக்கு நீலகிரி தெற்கு கோட்ட மாவட்ட வன அலுவலர் அலுவலகத்தில் தங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் நேரிலோ அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அனுராக் மிஸ்ரா கூறியுள்ளார்.

## பிரானூரில் பயிர் பரப்பாய்வு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2011,01:36 IST

தென்காசி : பிரானூரில் பயிர் பரப்பாய்வு நடந்தது. பிரானூர் பார்டரில் நடந்த பயிர் பரப்பாய்வுக்கு ஆய்வு அலுவலரும் நெல்லை புள்ளியியல் உதவி இயக்குநருமான முத்துப்பாண்டி தலைமை வகித்தார். செங்கோட்டை தாசில்தார் சிவகாமி முன்னிலை வகித்தார். தென்காசி கோட்ட புள்ளியியல் அலுவலர் ஆலி செய்யது சிராஜ்தீன் பாவா, மண்டல துணை தாசில்தார் பாலசுப்பிரமணியன், புள்ளியியல் ஆய்வாளர் கோமுதுரைப்பாண்டியன், தென்காசி வட்டார புள்ளியியல் ஆய்வாளர் சண்முகசுந்தரம், வட்ட சார்பு ஆய்வாளர் கோட்டியப்பன், குறு வட்ட சார்பு ஆய்வாளர் ஹரிகரன், ஆர்.ஐ.ரவீந்திரன், வி.ஏ.ஓ.முருகேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மருத்துவ பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2011,23:15 IST

தேனி : மருத்துவ பயிர் சாகுபடி செய்வதற்கு, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. மாநிலம் முழுவதும் மருந்து பயிர்களுக்கு கிராக்கியும், தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. மருந்து பயிர்களை அதிகம் சாகுபடி செய்வதற்கு தேவையான பயிற்சிகளை விவசாயிகளுக்கு வழங்குமாறு தோட்டக்கலைத்துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள 40 அரசு தோட்டக்கலை பண்ணைகளில் இந்த பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதற்காக தோட்டக்கலைப் பண்ணைகளில் மருந்து பயிர்களை சாகுபடி செய்வதோடு, பண்ணை மேலாளர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. அந்தந்த பகுதிக்கு உட்பட்ட விவசாயிகளை பண்ணைக்கு நேரடியாக அழைத்து பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

# உலக காபி ஏற்றுமதி 24% உயர்வு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
கடந்த 2010–ஆம் ஆண்டில், உலக அளவில், காபி ஏற்றுமதி மதிப்பின் அடிப்படையில் 24 சதவீதம் அதிகரித்து 1,650 கோடி டாலராக உயர்ந்தது. இது, 2009–ஆம் ஆண்டில் 1,330 கோடி டாலராக இருந்தது.

அளவு அடிப்படையில்...

அதேபோல், அளவு அடிப்படையில் ஏற்றுமதி கடந்த ஆண்டின் 9.62 கோடி மூட்டை என்ற அளவில் இருந்து 0.52 சதவீதம் உயர்ந்து 9.67 கோடி மூட்டை அளவை எட்டியுள்ளது என உலக காபி அமைப்பு தெரிவித்துள்ளது. ஒரு மூட்டை என்பது 60 கிலோ காபியை கொண்டதாகும்.
கடந்த 2010–ல் காபி பயன்பாடு 28 சதவீதம் (10.55 கோடி மூட்டை) அதிகரித்து 13.48 கோடி மூட்டையாக உயர்ந்துள்ளது. இதன் அடிப்படையில், உலக அளவில், எதிர்வரும் காபி பருவத்தில் (2011–12 அக்டோபர்–செப்டம்பர்) 13 கோடி மூட்டை காபி உற்பத்தி ஆகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
காபி ஏற்றுமதி செய்யும் நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் சந்தைகளை விரிவாக்கம் செய்து வரும் நாடுகளில் காபிக்கான தேவை அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.
ஏற்றுமதி செய்யும் நாடுகளின் காபி பயன்பாடு 2010–ஆம் ஆண்டில் 4.13 கோடி மூட்டையாக அதிகரித்துள்ளது. கடந்த 2000–ஆம் ஆண்டில் இருந்த அளவான 2.64 கோடி மூட்டையை விட இது 56.4 சதவீதம் அதிகம் ஆகும். வளர்ந்து வரும் நாடுகளில் 2000–ஆம் ஆண்டில் 1.37 கோடி மூட்டையாக இருந்த பயன்பாடு 2010–ல் 32.8 சதவீதம் அதிகரித்து 1.82 கோடி மூட்டையாக அதிகரித்துள்ளது.

நிலையான சந்தைகள்

அதேபோல் நிலையான சந்தைகளை ஏற்படுத்தியுள்ள நாடுகளில் 2000–ல் 6.54 கோடி மூட்டையாக இருந்த பயன்பாட்டு அளவு 15 சதவீதம் அதிகரித்து 7.52 கோடி மூட்டையாக உயர்ந்துள்ளது.